

திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதி, "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரையின் தொடர்ச்சியாக பொது மக்கள், வணிகர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்களிடம் கருத்து கேட்பு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களிடம் வர்த்தகசங்கத்தினர் கோரிக்கை மனுவினை அளித்தனர். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், மேயர் நிர்மலா வேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

### மக்கள் விரோத ஒன்றிய அரசின் போக்கைக் கண்டித்து தொழிற்சங்கங்கள் இன்று நடத்தும்

# பொது வேலைநிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வீர்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

*சென்னை, பிப்.12-*

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் 100 ஆண்டுகளாக இந்தியாவில் செயல்பட்டு வந்த 44 தொழிலாளர் நலன் சார்ந்த சட்டங்களில் 29 சட்டங்களை இணைத்து 4 தொகுப்புச் சட்டங்களாக வடிவமைத்து வரைவு நகல் அனைத்து தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டு அதன் மீது மத்திய தொழிற்சங்கங்கள் தங்களின் ஆட்சேபனைகளை, திருத்தங்களை அனுப்பி வைத்தும், அவை ஏற்கப்படாமல் இத்தொகுப்பு சட்டம் தொடர்பாக இந்திய தொழிலாளர் மாநாட்டில் விவாதிக்கப் படவில்லை. தொழிலாளர் நலன் இந்திய அரசியல் சாசனத்தின் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளதால் மாநில அரசு களிடம் உரிய கலந்தாய்வுசெய்யப்படவில்லை. பாராளுமன்றத்தில் நிலைக் குழுவில் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள், திருத்தங்கள் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் விவாத மின்றியே இத்தொகுப்புச் சட்டங்களை நிறைவேற்றப் பட்டுள்ளது.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப் பட்ட இந்த தொகுப்புச் சட்டங்கள் நமது எதிர்ப் பின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், ஒன்றிய அரசு 2025 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் தேதி இச்சட்டங்கள் நடைமுறைக்கு வரும் என அறிவிப்பு செய்துள்ளது. எந்தவொரு சட்டமானாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்றிய அரசு விதிகளை இயற்ற வேண்டும். ஆனால் ஒன்றிய அரசு விதிகளை டிசம்பர் 30 நாளிட்ட அறிவிக்கை மூலம் வெளியிட்டுள்ளது. 45 நாட்கள் கருத்து கேட்பிற்குப் பின்னர் ஆட்சேபனை திருத்தங்கள் தொடர்பாக விவாதித்து அதன் பின்னர் விதிகள் இறுதி செய்யப்பட வேண்டிய நடைமுறை உள்ளது. அதன் காரணமாக தற்போது சட்டம் நடைமுறைக்கு வரும் என்று அறிவித்த பின்னரும், சட்டத்தை நடைமுறைப்படுத்த இயலாத தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

ஒன்றியத்தில் உள்ள பல மாநில அரசுகள் விதிகளை உருவாக்கி இறுதி செய்யவில்லை என்பதால், மாநிலங்கள் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஒரு சிக்கலை உருவாக்கி உள்ளது.

இத்தொகுப்புச் சட்டங்கள் பன்னாட்டு பெருமுதலாளிகள் இந்நாட்டு தொழிலதிபர்கள் இலகுவான வர்த்தகம் செய்யும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தங்களின் பணி நியமனம், பணியிடப் பாதுகாப்பு, பணிப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்டவைகளை பெறுவதற்கும், நியாயமான ஊதியம் மற்றும் போனஸ் போன்றவைகளை பெறுவதற்கு என தங்களுக்கான தொழிற்சங்க அமைப்பை உருவாக்கிக் கொள்ள 1926 தொழிற்சங்கச் சட்டம் வகை செய்கிறது. தற்போது உருவாக்கப் பட்டுள்ள தொகுப்புச் சட்டங்கள் முந்தைய சட்டத்தை பலவீனப்படுத்துகிற வகையில் 10 சதவிகித தொழிலாளர்கள் அல்லது 100 தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்தால் மட்டுமே தொழிற்சங்கத்தைப் பதிவு செய்ய இயலும் என்பதும், தொழிற்சங்கத் தகராறுகளை தீர்க்க தீர்ப்பாயம் அமைப்பதும், தொழிற்சங்கங் களின் பதிவை ரத்து செய்வதற்கும் வகை செய்யும் பிரிவுகள் உள்ளன. தொழிற்சங்க அங்கீகாரம் பெறு வதற்கு வருகைப் பதிவேட்டில் உள்ளவர்களில் 51 சதவிகிதம் ஆதரவு இருந்தால் மட்டுமே அங்கீகாரம் என்ற நிலையும் 20 சதவிகிதமான ஆதரவு இருந்தால் சமரச குழுவிற்கு ஒரு அங்கத்தினர் வீதம் தேர்ந்தெடுக்கலாம் என்பவை ஆபத்தமான அம்சங்களாகும்.

தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கை 10 சதவிகிதத்திற்கோ அல்லது 100 தொழிலாளர்கள் எண்ணிக்கைக்கோ குறையாமல் எல்லா நேரங்களிலும் பராமரிக்கப்பட வேண்டும். இல்லையேல் பதிவு ரத்தாகிவிடும் என்பது தொழிற்சங்க இயக்கத்தை முடமாக்கும் செயலாகும்.

தற்போது நடைமுறையில் உள்ள நிலையாணைகள் சட்டப்படி 100 தொழிலாளர்கள் இருந்தால் அந்த நிறுவனத்திற்கு நிலையாணை உருவாக்க வேண்டும் என்பது நியதியாகும். தற்போது இத்தொகுப்புச் சட்டங்களில் 300 தொழிலாளர்கள் அதற்கு மேலும் தொழிலாளர்கள் இருந்தால் மட்டுமே நிலையாணை சட்டம் நடைமுறைப்படுத்த முடியும் என்கிற அபாயத்தை ஏற்படுத்துகிறது.

இந்திய நாட்டில் சற்றேறக்குறைய சிறு, குறு நடுத்தர தொழில்கள் என 80 சதவிகிதமான தொழிற்சாலைகளில் 300க்கும் குறைவான தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இத்தொழிற் சாலைகளில் பணிபுரியும் கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைநேரம், பணியிடப் பாதுகாப்பு, குற்றச்சாட்டுகளின் மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கை, ஆலை மூடல், ஆட்குறைப்பு மற்றும் ஆலை செயல்பாட்டை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் போன்றவைகளுக்கு அரசின் அனுமதி பெற வேண்டும் என்கிற கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதால் பெரும் பகுதியான தொழிலாளர்கள் முதலாளிகளால் "அமர்த்து, துரத்து" என்கிற அபாயமான கட்டத்திற்கு தள்ளப்படுகிறார்கள்.

இத்தொகுப்புச் சட்டத்தில் பணியாளர், தொழிலாளர், கட்டுமானத் தொழிலாளர், ஒப்பந்தத் தொழிலாளர், ஜிக் தொழிலாளர்கள் என தொழிலாளர்களை வேறுபடுத்தி விளக்கங்கள் அளிக்கப்படுகிறது. இதன் காரணமாக ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நீதிமன்றத் தீர்ப்புகளில் அளிக்கப்பட்டுள்ள தொழிலாளர், பணியாளர் என்கிற நிலைகளிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு 15வது இந்தியத் தொழிலாளர் மாநாடு, நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவைகளை கணக்கில் கொள்ளாமல், குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கிற முறையும், தேசிய குறைந்தபட்ச தள ஊதியம் நிர்ண யிக்கிற சூழலும் இத்தொகுப்புச் சட்டங்கள் மூலம் புகுத்தப்படுகிறது. குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயத் திற்கு கலந்தாலோசனை செய்ய தற்போது உள்ள குழுக்களில் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு இடம் உள்ளது. ஆனால் தொகுப்புச் சட்டத்தில் அத்தகைய ஆலோசனைக் குழுக்கள் இன்றியே அறிவிக்கை மூலமாகவே குறைந்தபட்ச ஊதியத்தை அரசு நிர்ணயிக்க இத்தொகுப்புச் சட்டம் வழி செய்கிறது.

இத்தொகுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பெண்களுக்கு அதிகாரம் அளிக்கிறோம் என பறைசாற்றிக் கொள்ளும் பா.ஜ.க. அரசு சம வேலைக்கு சம ஊதிய சட்டத்தில் ஆலோசனைக் குழுவில் ஏற்கெனவே உள்ள சட்டப்படி 50 சதவிகிதம் பெண்கள் இருக்க வேண்டும் என்பதை தற்போது உள்ள புதிய தொகுப்புச் சட்டத்தில் 33 சதவிகிதமாக பெண்களின் பங்கை குறைத்துள்ளது.

இந்நிலையில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க முடியும் என்பதும் கேள்விக் குறியாக உள்ளது. வேலை நேரம் 8 மணி நேரம். ஆனால் வாரத்தில் எத்தனை மணி நேரம் வேலை என்பதை இத்தொகுப்புச் சட்டம் தெளிவு படுத்தவில்லை. மேலும் வேலை நேரத்தை மாற்றியமைக்க இனி சட்டத் திருத்தம் செய்ய நாடாளு மன்றத்தின் அங்கீகாரமில்லாமலே அரசு அறிவிக்கை மூலம் பணி நேரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பை இத்தொகுப்புச் சட்டங்கள் உருவாக்கி உள்ளது.

ஆகவே, நீண்ட நெடுங்காலம் போராடி நம்முடைய தொழிற்சங்க முன்னோர்கள் பெற்ற உரிமைகளை சர்வதேச தொழிலாளர் அமைப்பு பரிந்துரையின் மூலம் கிடைக்கப் பெற்ற சட்டப் பாதுகாப்புகளை இத்தொகுப்புச் சட்டங்கள் பறித்துள்ளது என்பதும், மின்சார சட்டம் திருத்தப்பட்டால் மின்சார உற்பத்தி, விநியோகம் தனியார் மயமாகும். விவசாயிகளின் விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிப்பதற்கு தொடர்ந்து ஒன்றிய அரசு மறுத்து வருகிறது. விதைகள் சட்டத்தை திருத்துவதன் மூலம் சிறு, குறு விவசாயிகள் தங்கள் சொந்த பயன்பாட்டிற்கு வைத்துள்ள விதைகளை கூட அவர்கள் பயன் படுத்த இயலாத அபாயத்திற்கு விதைகள் திருத்தச் சட்டம் வழிவகுக்கிறது. பன்னாட்டு முதலாளிகள் மரபணு மாற்று விதைகளை வழங்கினால் அதனை ஏற்று ஒவ்வொரு ஆண்டும் விவசாயம் செய்ய விதைக்காக பெருமுதலாளிகளின் தயவை நாடியிருக்க வேண்டிய அபாயத்தை ஒன்றிய அரசு உருவாக்க முயல்கிறது.

அமெரிக்க நாட்டோடு செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தத்தில் அமெரிக்காவில் உற்பத்தியாகும் விவசாயப் பொருட் களை இறக்குமதி செய்தால் இந்திய நாட்டு விவசாயிகள் உருவாக்கும் விவசாயப் பொருட்களுக்கு நியாயமான சந்தையும், விலையும் கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளது. இத்தொகுப்பு சட்டங்களால் தொழிலாளர், விவசாயிகள், மக்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதை பா.ஜ.க. அரசுக்கு உணர்த்தும் வகையில் மத்திய தொழிற்சங்கங்கள், தொழில்வாரி அமைப்புகள், விவாசய அமைப்புகள் இணைந்து அறிவித்துள்ள பிப்ரவரி 12 நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வது அவசரமும், அவசியமும் நிறைந்தது ஆகும்.

இந்திய நாட்டுத் தொழிலாளர்கள், குறிப்பாக தமிழகத் தொழிலாளர்கள், விவசாயிகள் பெரும் பகுதியாக வேலைநிறுத்தத்தில், மறியலில் பங்கேற்க வேண்டுமென தொ.மு.ச. பேரவை சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

"புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்.
புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




நெய்வேலி சட்டமன்றத் தொகுதி காடாம்புலியூர் அருகே உள்ள சங்கமம் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" முகாமை சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் டாக்டர் அறிவொளி, டாக்டர் விஜயராகவன், டாக்டர் திருநாவுக்கரசு, டாக்டர் அரவிந்த் உள்ளிட்ட மருத்துவக் குழு, BDO , மீரா கோமதி, அறிவழகன், ராஜா மாவட்ட பிரதிநிதி ஆடலரசன், வீரராமச்சந்திரன், சுமதி, நந்தகோபால், ஞானசேகர், அருள்முருகன், சிவமுருகன், பொன்னம்பலம், அன்பழகன், பாபு, பாஸ்கர், தனசேகர், வைரவன், ரகுபதி, லோகேஷ், மதன், சூர்யா, தஷ்ணாமூர்த்தி, ஆறுமுகம், ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர் .



இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் சட்டமன்ற அறிவிப்பின்படி 70 வயது கடந்த மூத்த தம்பதியர் கௌரவிக்கும் வகையில் இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் லட்சுமி நரசிம்மர் திருக்கோவிலில் 70 வயதை கடந்த 75 மூத்த தம்பதியரை வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு வேட்டி சேலை மற்றும் தாம்பூலம் தட்டுடன்கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி சிறப்பு செய்தார். உடன் தமிழ்செல்வி அசோகன், ஏ.எஸ். பழனி, ஹரி என்.ராஜ்குமார், மு.சிவானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன் ஒன்றிய செயலாளர்கள் டி.கிருஷ்ணமூர்த்தி ,இ.செல்வம், பூர்ணிமா ரவிச்சந்திரன், யமீன் ஷரீப் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலையில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை!

## கலாநிதி வீராசாமி பொதுமக்கள், வணிகர்களிடம் கருத்து கேட்டறிந்தார்

*திருவண்ணாமலை, பிப்.12-*

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி திமுக சார்பில், "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரையில் கருத்து கேட்கும் கூட்டம் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமியிடம் பொதுமக்கள், வியாபாரிகள், விவசாயிகள், பேரராசிரியர்கள், அரசு ஊழியர்கள் உள்ளீட்டோர் கோரிகை மனுக்களை அளித்தனர்.

10.02.2026 செவ்வாய்க்கிழமை மாலை 3.30மணிக்கு திருவண்ணாமலை, காமராஜர் சிலை அருகில் உள்ள கலைஞர்பன்னோக்குமையத்தில் திருவண்ணா மலை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில், "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரையில் கருத்து கேட்கும் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கருத்து கேட்பு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கலந்து கொண்டு பொதுமக்கள், வியாபரிகள், விவசாயிகள், பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள் உள்ளீட்டோர் கருத்துகளை கேட்டறிந்தார்.

கருத்து கேட்புகூட்டத்திற்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமை வகித்தார். கூட்டத்தில் கலந்து கொண்டு வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் அளித்த கோரிக்கையில்...

திருவண்ணாமலையில் இருந்து சென்னை செல்வதற்காக திண்டிவனம் - செஞ்சி இரு வழிப்பாதை தயார் செய்யப்பட்டது, ஆனால் திட்டம் நிறைவேறாமல் அப்படியே உள்ளது. ஆதனை ஒன்றிய அரசை கேட்டு அமைத்து தரவேண்டும்.

திருவண்ணாமலைக்கு வந்தேபாரத் மூலம் விரைவு ரயில்களை டெல்லி, சூரத், குஜராத், போன்ற வட மாநிலங்களில் இருந்து பொருட்களை கொண்டு வரும் வியாபாரிகளுக்கு திருவண்ணாமலை மக்கள் பயன்படுத்திக் கொள்ள ரயில்வே பார்சல் சர்வீஸ் ஏற்படுத்த வேண்டும்.

மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள கடைகள் மற்றும் கோவில் கடைகள் வாடகை அதிகமாக இருப்பதால் குறைந்த வாடகை கட்டணம் வசூல் செய்ய வேண்டும். மிகப் பெரிய அளவில் நான்கு சாலைகளிலும் கார் பார்க்கிங் வசதிசெய்து தர வேண்டும்.

அண்ணாமலையார் கோவிலுக்கு பக்தர்களுக்கு இலவச ஓய்வு தளங்கள் அரசு சார்பில் கட்டி தர வேண்டும். அண்ணாமலையார் கோயிலில் உள்ளூர் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய தனி நேரம் அமைத்து தர வேண்டும்.

போக்குவரத்து போலீசார் மற்றும் குற்ற பிரிவு போலீசார்கள் அதிக அளவில் திருவண்ணாமலையில் பணி அமைத்திட வேண்டும்.

மாநகராட்சி மையப்பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைத்திட வேண்டும்.

ஆன்மிக பக்தர்கள் பேருந்து நிலையத்தில் இருந்து கிரிவலம் செல்ல பேட்டரி வாகனங்கள் அமைத்து தர வேண்டும்.

கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டு டாக்டர் கலாநிதி வீராசாமி உரையாற்றும் போது...

வணிகர்சங்க பிரமுகர்கள் தங்களுடைய கோரிக்கைகளை அளித்துள்ளார்கள். மாநில அரசு சார்பாக செய்ய வேண்டிய அனைத்து கோரிக்கைகளையும் திமுக தேர்தல் அறிக்கையில் வெளியிடுவதற்கு, தலைமையிடம் தெரிவிக்கப்படும். ஒன்றிய அரசு செய்ய வேண்டிய செயல்களை நாங்கள் பாராளுமன்றத்தில் ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைப்போம்.

தேர்தல் அறிக்கை குழுவினர் இங்கு வரும் போது இந்த கோரிக்கைகளை நீங்கள் மீண்டும் அளிக்கலாம். இன்று வர முடியாதவர்கள் அன்று வந்து கோரிக்கைகளை நேரடியாக சொல்லலாம்.

இவ்வாறு உரையாற்றினார்...

கருத்துக்கேட்பு கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா ப.விஜயரங்கன், மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை மாநகர் மாவட்டம்

# எல்லீஸ் நகர் பகுதி, 61வது வட்டம் மற்றும் மேல மாசி வீதி பகுதி, 77வது வட்டம் ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், எல்லீஸ்நகர் பகுதி, 61வது வட்டக் கழகச் செயலாளர் பி.கே.செந்தில் அவர்கள் பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகிப்பதால், அவரை வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. க.சுரேஷ் (10சி, ஜவஹர் 1வது தெரு, எஸ்.எஸ்.காலனி, மதுரை-10) அவர்கள் 61வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

மேல மாசி வீதி பகுதி, 77வது வட்டச் செயலாளர் திருமுருகன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு.சோ.தஞ்சைமதி, (காஜா தெரு, எம்.கே.புரம், மதுரை-11) அவர்கள் 77வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 10.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி மா. பாலகிருஷ்ணன்

**பிப்ரவரி 12 (2010)**



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

புரவலர் அன்பிலாருடன் இணைந்து பணியாற்றி பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

திருச்சி நகர்மன்றத் தலைவராக திறம்பட பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக வாழ்நாளின் இறுதிவரை இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**